1975 மார்ச் 25]

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, தற்போது கொடைக்கானலுக்கும் பழனிக்கும் இடையே இப்படிப்பட்ட ஒரு இழுவை ரயில் போடப் படுவதாகச் சொல்லப்படுகிறது. அதைப்போலவே, ஜப்பான் போன்ற நாடுகளில் செய்யப்பட்டிருப்பதைப்போலவே, மேட்டுப்பாளையத்திலிருந்து மேலே செல்வதற்கு இப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுத்தால் ஏராளமாக அந்நியச் செலாவணி ஈட்ட முடியும். ஆகவே, செலவு அதிகமாக இருந்தாலும் வெளிநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் இத்தகைய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சுற்றுலாத் துறையில் அதுபற்றி செயற்குறிப்பு இல்லை. அவைகளை எல்லாம் நிறைவேற்றுவது நல்லதுதான். அதற்கு அடிப்படையாகத் தேவைப்படுவது நிதிவசதி. நிதி வசதி ஏற்படும்போதுதான் அவைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

கொரடாச்சேரி ஒன்றிய மருத்துவமனை.

*449 வினா—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சை மாவட்டம், கொரடாச்சேரியில் உள்ள ஒன்றிய மருத்துவ மனையை அரசு மேற்கொள்ளும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, கொரடாச்சேரி தஞ்சை மாவட்டத்தில் ஒரு முக்கியமான பகுதியாக இருந்தும், இன்னும் ஊராட்சி ஒன்றிய மருந்தகமாக இருப்பதால் அதை விரிவு படுத்தவோ, மேலும் சிறப்பாக நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கின்ற முறையில் மருந்துகள் கொடுக்கவோ ஒன்றியத்தால் இயலவில்லை என்பதால் அதை அரசாங்கம் இனியாவது உடனடியாக எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒன்றியங்களால் நடத்தப்படுகின்ற இத்தகைய மருந்தகங்களில், மாவட்ட கழகத்தால் ஒரு காலத்தில் நடத்தப்பட்டு, அதற்குப் பின்னால் இந்த ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மருந்தகங்களை முதற்கட்டமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு முடிவுசெய்துள்ளது. அந்த வகையிலே தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ 40,45 மருந்தகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு

ஆண்டுக்கும் 5,6 மருந்தகங்கள் எடுத்துக்கொள்வது என்ற முறையில் இதுவரையில் 18 அல்லது 20 மருந்தகங்கள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. தொடர்ந்து நிதி வசதிக்கு ஏற்ப அதிக மருந்தகங்களை எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலனை செய்யும்போது கூடுமானுல் இந்த மருந்தகத்தையும் எடுத்துக்கொள்ளலாம்.

ஆரம்ப சுகாதார நிலையம், காட்டாம்பூண்டி.

* 450 வினு.—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திருவண்ணுமலை ஊராட்சி ஒன்றியம், காட்டாம்பூண்டி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இதுவரை வாகன வசதி அளிக்கப் படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் 24—5—1972-ல் ஓர், வாகனம் காட்டாம்பூண்டி ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு வழங்கப் பட்டுள்ளது. இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு யூனிசெஃப் (**UNICEF**) நிறுவனம் மூலம் மற்றுமொரு வாகனம் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) வினுவுக்கு இடமில்லை.

போலி சர்டிபிகேட்டுகளுடன் வைத்தியத் தொழில் நடத்துவோர்.

* 451 வினு.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தய்வு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) போலி சர்ட்டிபிகேட் வைத்து வைத்தியத் தொழில் நடத்தி வந்ததாக சென்னையில் யாராவது கைது செய்யப்பட்டுள்ளனரா ?

(இ) ஆம் எனில், அவ்விதம் கைது செய்யப்பட்டவர்களின் விபரம் என்ன ?